# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2054/2 - 2018 ජනවාරි මස 15 වැනි සඳුදා - 2018.01.15

*2054/2 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

வட மாகாண மாகாண சபை

2017 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க வட மாகாண சுற்றுலா பயணத்துறை பணியக நியதிச் சட்டம்

வட மாகாண, மாகாண சபையால் 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க வட மாகாண சுற்றுலா பயணத்துறை பணியக நியதிச்சட்டத்திற்கு வட மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதி அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

க. தெய்வேந்திரம்,<br>
செயலாளர்,<br>
பேரவைச் செயலகம்,<br>
வட மாகாண சபை.

பேரவைச் செயலகம்,<br>
ஏ 9 வீதி,<br>
கைதடி,<br>
2018, சனவரி 11.

**வட மாகாணத்தின் சுற்றுலாப்பயணத்துறை பணியகத்தை தாபிப்பதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு நியதிச்சட்டம்.**

முன்னுரை.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வட மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

1. இந்நியதிச்சட்டம் 2017 ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க, வடமாகாணத்தின் சுற்றுலாப்பயணத்துறை பணியக நியதிச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், வடமாகாண ஆளுநர் எந்தத் தேதியன்று அது நடைமுறைக்கு வருவதற்கான அவரது சம்மதத்தை அளிக்கக்கூடுமோ அந்தத் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம்I

### வடமாகாணத்தின் சுற்றுலாப்பயணத்துறை பணியகத்தை தாபித்தல்

சுற்றுலாப் பயணத்துறை பணியகத்தை தாபித்தல்.

2. (1) வடமாகாணத்தின் சுற்றுலாப்பயணத்துறை பணியகம் என அழைக்கப்பட்ட பணியகமொன்று (இதனகத்துப்பின்னர் “பணியகம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) இந்நியதிச்சட்டத்தின் நோக்கத்துக்காகத் தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) பணியகமானது, இப்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்டதாகவிருத்தலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத்தொடுக்கலா மென்பதுடன், அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

பணியகத்தின் குறிக்கோள்கள்.

3. இந்த பணியகத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) சுற்றுலாப் பயணத்துறை பற்றிய தேசியக் கொள்கைக்கிணங்க வடமாகாணத்தினுள் சுற்றுலாப் பயணத்துறையை மேம்படுத்துதலும் அபிவிருத்திசெய்தலும்;

(ஆ) வட மாகாணத்தினுள் 2005 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளுக்கு உட்பட்டு நிலைபெறுதகு முறையில் தேவைப்படும் கவர்ச்சிகரமான மற்றும் வினைத்திறனான உபசாரத் தொழிலுட்பட சுற்றுலாப் பயணத்துறைச் சேவைகளை அபிவிருத்தி செய்தலும் மேம்படுத்துதல்;

(இ) இலங்கையின் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலாக்கழகங்களின் ஒத்தாசையுடன் வடமாகாணத்தினுள் சுற்றுலாப்பயணத்துறை தொடர்பான தகவலைச் சேகரித்தலும் அத்தகைய தகவலையும், படங்களையும், ஏனைய விடயங்களையும் வெளியிடுதல்;

(ஈ) வட மாகாணத்தினுள் சுற்றுலாப்பயணத்துறைத் தொழிலை மேம்படுத்துவதிலும் அத்தகைய தொழிலுடன் சம்பந்தப்பட்ட மேம்படுத்துகைசார் மற்றும் பயிற்சி நடவடிக்கைகளிலும் பங்குபற்றுவதற்குத் தனியார்துறையிலுமுள்ள/பொதுத்துறையிலுமுள்ள ஆட்களை அல்லது ஆட்கள் குழுக்களை ஊக்குவித்தல்;

(உ) இலங்கையின் பொருளாதாரத்தை விரிவுபடுத்துவற்காகவும் அபிவிருத்தி செய்வதற்காகவும் பங்களிப்பைப் பெறுவதற்கெனச் சுற்றுலாப் பயணத்துறை மற்றும் பயணத்துறைகளை ஊக்குவிக்கு முகமாகப் பணியாற்றுதல்.

(ஊ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப்பயணத்துறைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைச் சுற்றுலாப்பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒத்தாசையாக செயற்படுதல்.

(எ) இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வட மாகாணத்தை ஒரு சுற்றுலாப் பயண மற்றும் பயணச் சேரிடமாக அபிவிருத்தி செய்தல்:

4. (1) பணியகத்தின் அலுவல்கள், (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வருவோரைக் கொண்டுள்ள முகாமைச் சபையினால் நிருவகிக்கப்படுதலும் முகாமைசெய்யப்படுதலும் வேண்டும். பணியகத்தின் முகாமைச் சபையினது அமைப்பு.

(அ) ஐந்து பதவி வழி உறுப்பினர்கள் அதாவது:

I. வட மாகாண சுற்றுலாப் பயணத்துறை என்னும் விடயத்துக்கு எந்த அமைச்சர் பொறுப்பாகவுள்ளாரோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்,

II. வட மாகாண பிரதிப் பிரதம செயலாளர் - நிதி,

III. வட மாகாண உள்ளூராட்சி எனும் விடயத்திற்கு எந்த அமைச்சர் பொறுப்பாக உள்ளாரோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்,

IV. வட மாகாண சமூக சேவை எனும் விடயத்திற்கு எந்த அமைச்சர் பொறுப்பாக உள்ளாரோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது வட மாகாண சமூக சேவைத் திணைக்களப் பணிப்பாளர்,

V. இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அதிகார சபையின் பிரதிநிதி:

(ஆ) சுற்றுலா என்னும் விடயத்திற்குப் பொறுப்பான (இதனகத்துப் பின்னர் "அமைச்சர்" எனக் குறிப்பிடப்படும்) அமைச்சரினால் பின்வருமாறு நியமிக்கப்பட்டவர்களும் (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுபவர்களுமான) வேறு ஐந்து உறுப்பினர்கள்:-

(i) வடமாகாண சுற்றுலாக்கழகத்தின் தலைவர் அல்லது அவரின் பிரதிநிதி,

(ii) ஒவ்வொருவரும் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளைக் கொண்டவராகவும் சுற்றுலாப் பயணத்துறையில் அவர்களுள் திறமை எய்தியுள்ளவராகவும் இருக்க வேண்டிய விடுதி மற்றும் பயணத்துணைத் துறைகளைகள் உள்ளடங்கலாக சுற்றுலாத் துறையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளைப் பெற்றுள்ளதும் திறமைவாய்ந்ததுமான நான்கு உறுப்பினர்கள்.

(2) சுற்றுலாத்துறையில் தகுதி மற்றும் அனுபவம் கொண்ட ஒரு நபரை அமைச்சர், பணியகத்தின் தலைவராக நியமிப்பதுடன் அவரே முகாமைத்துவ சபையின் தலைவராகவும் இருப்பார்.

(3) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பதன் மூலம், பதவி விலகுவதன் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் முன்னரே பதவியை அவர் வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலமொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலொழிய, மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(4) அமைச்சர், நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றுதல் உசிதமானதெனக் கருதினால், அதற்கான காரணங்களைக் குறித்தளித்தபின்னர் அவ்வாறு செய்யலாம்.

(5) நியமிக்கப்பட்ட உறுப்பினர், எவரேனும் அமைச்சருக்கு முகவரியிடப்பட்டு பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட அப்பொருள்பட்ட கடிதத்தின் மூலம் தமது பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம்.

(6) நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரேனும் இறப்பதன்மூலம், பதவிவிலகுவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் பதவியை வறிதாக்கும் பட்சத்தில், அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய உறுப்பினரை அடுத்துறுவதற்கு வேறெவரேனும் ஆளை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினர், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(7) நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், சுகவீனம், உடற்றகுதியீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக மூன்று மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்குத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, அத்தகைய இயலாமைபற்றி அமைச்சருக்கு எழுத்தில் அறிவிப்பது அத்தகைய உறுப்பினரின் கடமையாதல் வேண்டும். அமைச்சர், அத்தகைய தகவலைப் பெற்றதன் மேல், (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அவரினிடத்திற் செயலாற்றவென வேறோராளை நியமிக்கலாம்.

சபையின் கூட்ட நடப்பெண்ணும் கூட்டங்களும்.

5. (1) சபையின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(2) தவிசாளர், சபையின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் வருகைதராத போது சமுகமளித்துள்ள உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிவழி உறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(3) சபையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான எல்லாக் கேள்விகளும் அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்துள்ள உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரின் வாக்கின்மூலம் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில், தவிசாளர், தமது சொந்த வாக்குடன் சேர்த்து மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றை உடையவராதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, சபையின் கூட்டங்களும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதலும் தொடர்பான நடவடிக்கைமுறையைச் சபையானது ஒழுங்குபடுத்தலாம்.

சபையின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள், ஏதேனும் வெற்றிடம் காரணமாகச் செல்லுபடியற்றனவாகக் கருதப் படுதலாகாது.

6. சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், சபையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது சபை உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதலாகாது.

சபையுறுப்பினர்களின் ஊதியம்.

7. சபையுறுப்பினர்களுக்கு,மாகாண சபையின் அங்கீகாரத்துடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

சபையுறுப்பினராக விருப்பதற்கான தகைமையீனம்.

8. நான்காம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் சபையுறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்:-

(அ) அவர், பாராளுமன்றத்தின், ஏதேனும் மாகாணசபையின் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினராக இருந்தால் அல்லது தெரிவுசெய்யப்பட்டால்;

(ஆ) அவர், இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்கவகையற்றவராக அல்லது பொறுப்புவிடுவிக்கப்படாத வங்கிமுறிந்தவராக வெளிப்படுத்தப் பட்டிருந்தால்;

(இ) அவர், இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்றவராகக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டிருந்தால்;

(ஈ) அவர், ஒழுக்கக்கேட்டை உட்படுத்துவதும் ஆறு மாதங்களுக்குக் குறையாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதுமான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டால்;

(உ) அவர், இலங்கையின் அல்லது வேறேதேனும் நாட்டின் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனையை அல்லது ஒத்தி வைக்கப்பட்ட மறியல் தண்டனைத் தீர்ப்பை அனுபவித்துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால்; அல்லது

(ஊ) அவர், சபைஉறுப்பினராகத் தமது பணிகளை நிறைவேற்றுவதனைப் பங்கமானமுறையில் பாதிக்கக்கூடியவாறான ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருந்தால்.

9. (1) பணியகத்தின் இலச்சினை, சபை காலத்துக்குக்காலம் முடிபுசெய்யக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும். பணியகத்தின் இலச்சினை.

(2) பணியகத்தின் இலச்சினை,சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) பணியகத்தின் இலச்சினை, சபையின் வலுவளிப்புடனும் சபையினாலேயே நியமிக்கப்பட்ட சபையின் இரு உறுப்பினர்களின் சமுகமளித்திலுமின்றி ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமுகமளித்திருந்தனர் என்பதற்கத்தாட்சியாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) பணியகத்தின் இலச்சினை எந்தச் சாதனங்களிலும் ஆவணங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாதனங்களும் ஆவணங்களும் பற்றிய இடாப்பொன்றைச் சபையானது பேணுதல் வேண்டும்.

10. பணியகத்தின் தத்துவங்களும், பணிகளும், கடமைகளும் பின்வருவனவாதல் வேண்டும்:- பணியகத்தின் தத்துவங்களும், பணிகளும், கடமைகளும்.

(அ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப்பயணத்துறைச் சட்டத்தின் பிரிவு 2 இன் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைச் சுற்றுலாப்பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் கலந்தாலோசனையுடன் செயலாற்றுதல்.

(ஆ) சுற்றுலாப்பயணிகளுக்கு வழங்கப்படுகின்ற வசதிகளைச் சீராக்குவதில் ஈடுபடுதல், உதவுதல் அல்லது அதனை மேம்படுத்துதல்;

(இ) சுற்றுலாத்துறைத் நிறுவனங்களை இயக்குதல் மற்றும் சுற்றுலாத்துறைச் சேவைகளை வழங்குதல்,போன்ற நடவடிக்கைகளுக்கு இலங்கைச் சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபைக்கு உதவுதல் அத்துடன் சுற்றுலாத்தறை நிறுவனங்களை இயக்கும் ஆட்களை ஒருங்கிணைத்து வட மாகாணத்தினுள் சுற்றுலாத்துறைச் சேவைகளைத் வழங்குதல்.

(ஈ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதலும்,வைத்திருத்தலும், குத்தகைக்கெடுத்தலும், வாடகைக்குக் கொடுத்தலும், அடமானம் வைத்தலும் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தலும்.

(உ) இப் பணியகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அத்தியாவசியமான ஆய்வுகளையும், ஆராய்ச்சிகளையும் பயிற்சியையும் ஒருங்கிணைத்தலும், அவற்றுக்கு உதவுதலும், அவற்றை ஊக்குவித்தலும்.

(ஊ) காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுதல் பணியகத்திற்கு வழங்கப்படும் வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பில் அரசாங்கத்தின் வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் முன் கூட்டிய எழுத்து மூலமான அங்கீகாரத்தைப் பணியகம் பெற்றுக்கொண்டிருப்பின்,

(எ) இப் பணியகத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமாகவிருக்கக் கூடியவாறான அத்தகைய ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் செய்துகொள்ளுதல்.

(ஏ) இப் பணியகத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்பட்ட அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், முடிவுறுத்துதலும், அவர்களுக்கு ஊதியமளித்தலும், அவர்களின்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும், அவர்களைப் பதவிநீக்குதலும்; அத்துடன்

(ஐ) இப் பணியகத்தின் முறையான மற்றும் வினைதிறனுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது உசிதமானவாறான வேறெல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

## பாகம் II

## பணியகத்தின் பணியாள் தொகுதியினர்

பணியகத்தின் பணிப்பாளர்.

11. (1) பணியகத்தின் பணிப்பாளராகவிருப்பதற்காக தகுதி வாய்ந்தவரும் பொருத்தமானவருமான ஆளொருவர் ஆட்சேர்ப்பு முறையில் சபையின் ஒருமைப்பாட்டுடன் அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்; அவர் அதன் பிரதான நிறைவேற்றலுவலராகவிருத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர், சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் சமுகமளிப்பதற்கும் அத்தகைய கூட்டங்களில் உரையாற்றுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும், ஆனால் அத்தகைய எவையேனும் கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(3) பணிப்பாளர், தவிசாளரினதும் சபையினதும் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, பணியகத்தின் அலுவலர்களினதும் ஊழியர்களினதும் நிருவாகக் கட்டுப்பாடு உட்பட, பணியகத்தின் எல்லா அலுவல்களையும் நடாத்துவதற்குப் பொறுப்பாதல் வேண்டும்.

(4) மாகாணசபையின் அங்கீகாரத்துடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் பணிப்பாளருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(5) அமைச்சர், சபையின் ஒருமைப்பாட்டுடனும் அதற்காகக் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காகவும் உட்பிரிவு 1 இன் கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

பணிப்பாளர் தற்காலிகமாக வருகை தராதிருத்தல்.

12. பணிப்பாளர், சுகவீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தமது பணிகளுள் அல்லது கடமைகளுள் எவற்றையும் நிறைவேற்றுவதற்கு அல்லது புரிவதற்கு இயலாதவராகவிருக்கும் போதெல்லாம், அமைச்சர், சபையின் ஒருமைப்பாட்டுடன், அத்தகைய வராமையின் போது அவரினிடத்திற் செயலாற்றுவதற்கு பணியகத்தின் வேறெவரேனும் சிரேட்ட அலுவலரை நியமிக்கலாம்.

பணியகத்தின் பணியாட் டொகுதியினரை நியமித்தல்.

13. (1) சபையானது, இந்நியதிச்சட்டத்தின்கீழான அதன் தத்துவங்கள், பணிகள், கடமைகள் என்பவற்றை வினைத்திறனாகப் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும், புரிவதற்கும் அவசியமௌன அது கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களையும் வேறு ஊழியர்களையும் நியமிக்கலாம்.

(2) உட்பிரிவு 1 இன்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கும் வேறு ஊழியர்களுக்கும் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அவர்கள் அமைந்தோராதலும் வேண்டும்.

பணியகத்தின் பணியாட் டொகுதிக்குப் பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.

14. (1) சபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், விடயத்துக்கேற்ப, அவ்வலுவலரினதும் பொது நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் அல்லது வடமாகாண ஆளுநரினதும் சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு பணியகத்தின் பணியாட்தொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்தொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) எவரேனும் பகிரங்க அலுவலர் பணியகத்தின் பணியாட்தொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப் படுமிடத்து,

(அ) அவர் பணியகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட நேரத்தில், பகிரங்க சேவையில் அவரது நிலையான பதவி ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின்கீழ் ஓய்வூதியமுடையதாக வெளிப்படுத்தப்பட்ட பதவியாகவிருப்பின்-

(i) அவர் பணியகத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கையில், பகிரங்கக் கொள்கை என்ற ஏதுக்களின்மீது சம்பளமில்லாமல் வழங்கப்பட்ட லீவின்மேல் பகிரங்க சேவையில் கடமைக்கு வருகை தராதுள்ளவராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அக்குறிப்புகளின் 10 (1) ஆம் பிரிவு அவருக்கு ஏற்புடையதாதலும் வேண்டும், அத்துடன்:

(ii) அவர் தொடர்பில் பணியகமானது, அவர் பணியகத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கும் ஒவ்வொரு முழு மாதத்தின்போதும் திரட்டுநிதியத்துக்கு வரவு வைக்கப்படுவதற்கு பணியகத்தின் நிதிகளிலிருந்து திறைசேரிக்கு, விடயத்துக்கேற்ப, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள மாகாண அமைச்சரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறானதும், பகிரங்க சேவையில் அவரது நிலையான பதவியில் அவருக்குச் செலுத்தப்படற்பாலதான மொத்த சம்பளத்தின் இருபத்தைந்து சதவீதத்தை விஞ்சாததுமான அத்தகைய பணத்தொகையைச் செலுத்துதல் வேண்டும், அத்துடன்,

(ஆ) அவர் பணியகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட நேரத்தில், பகிரங்க சேவைச் சகாய நிதியக் கட்டளைச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவைச் சகாய நிதியத்துக்கு அவர் உதவுதொகை செலுத்துநராகவிருப்பின், பணியகத்தில் அவரது சேவை, அக்கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக, விடயத்துக்கேற்ப, அரசாங்கத்துக்கான அல்லது வடமாகாண சபைக்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அவர் பணியகத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கையில், செலுத்துவதற்கு அக்கட்டளைச் சட்டத்தின்கீழ் அவர் ஆளாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய உதவுதொகைகளைப் பகிரங்க சேவைச் சகாய நிதியத்துக்குத் தொடர்ந்து செலுத்துதலும் வேண்டும்; அத்துடன் அவர் தொடர்பில் பணியகமானது, ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும், பகிரங்க சேவைச் சகாய நிதியத்திலுள்ள தோதான கணக்குக்கு வரவு வைக்கப்படுவதற்குத் திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு பணியகத்தின் நிதிகளிலிருந்து, அவர்தொடர்பில் பகிரங்க சேவைச் சகாய நிதியத்துக்கு, விடயத்துக்கேற்ப, அரசாங்கம் அல்லது வட மாகாணசபை செலுத்துவதற்கு உட்பட்டதாகவுள்ளவாறான அத்தகைய உதவுதொகைக்குச் சமமான பணத்தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

(3) எவரேனும் பகிரங்க அலுவலர் பணியகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து,

(அ) அவர் பகிரங்க சேவையை விட்டு நீங்கியவராகக் கருதப்படுதல் வேண்டும்,

(ஆ) அவர் பணியகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்ட நேரத்தில், பகிரங்க சேவையிலான அவரது நிலையான பதவி ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின்கீழ் ஓய்வூதியமுடையதாக வெளிப்படுத்தப்பட்ட பதவியாகவிருப்பின்-

(i) அவர் பணியகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்ட திகதியன்று பகிரங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றிருப்பின் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கக் கூடியவாறான அக்குறிப்புகளின்கீழான அத்தகையவொரு அளிப்புக்கு அவர் தகவுடையவராதல் வேண்டும்,

(ii) அக்குறிப்புகளின்கீழ் அளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் அளிப்பின் தொகை, பணியகத்தின் பணியாட்டொகுதியிலான அவரது தொழிலானது, வயது அல்லது சுகவீனம் காரணமான ஓய்வுபெறுகைமூலம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதியில் அவர் வகித்த பதவி இல்லாதாக்கப்பட்டமை காரணமாக அல்லது விடயத்துக்கேற்ப, பொது நிருவாகம் என்னும் விடயத்திற்கேற்ப பொறுப்பாகவுள்ள அமைச்சரினால், அல்லது பொது நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள மாகாண அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் ஏதுவின்மீது முடிவுறுத்தப்பட்டாலொழிய, அவருக்குச் செலுத்தப்படுதலாகாது, அத்துடன்

(iii) அவர் பணியகத்தில் தொழிலுக்கமர்த்தப் பட்டிருக்கையில்இறக்கும்பட்சத்தில்,பணியகத்தின் பணியாட்டொகுதிக்கு அவர் நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கு நேர்முன்னர் அவர் இறந்திருப்பின் அக்குறிப்புகளின்கீழ் அவர்தொடர்பில் அளிக்கப்பட்டிருக்கக்கூடியதான அத்தகைய அளிப்பு அவர் தொடர்பில் அளிக்கப்படலாம், அத்துடன்

(இ) அவர் பணியகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்ட நேரத்தில், பகிரங்க சேவைச் சகாய நிதியக் கட்டளைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவைச் சகாய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துநராக இருந்திருப்பின், அவர் அக்கட்டளைச்சட்டத்தின் நோக்கத்துக்காக, பதவிநீக்கம் தவிர வேறுவகையாக, விடயத்துக்கேற்ப, அரசாங்கத்தின் அல்லது வடமாகாண சபையின் சம்மதத்துடன் அவரது ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டதன்மேல், விடயத்துக்கேற்ப, அரசாங்கத்தின் அல்லது வடமாகாணசபையின் சேவையை அவர் விட்டுநீங்கியவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் உடன்படிக்கையின்கீழ் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு, விடயத்துக்கேற்ப, அரசாங்கத்துக்கு அல்லது வடமாகாணத்துக்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டுள்ள எவரேனுமாளைச் சபையானது தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் பணியகத்திற்கான ஏதேனும் சேவைக்காலப்பகுதி, அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, விடயத்துக்கேற்ப, அரசாங்கத்துக்கான அல்லது வடமாகாணத்துக்கான சேவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

## பாகம் III

## நிதியம்

பணியகத்தின் நிதியம்.

15. (1) பணியகமானது அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன அத்தகைய நிதியத்தினுட் செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) பணியகத்தின் பயன்பாட்டுக்காக வடமாகாண சபையினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(ஆ) அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(இ) மானியக்கொடை, நன்கொடை மற்றும் கொடை முதலியன என்றவகையாகப் பெறப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும், அத்துடன்

(ஈ) பின்வரும் வழிகளில் வசூலிக்கப்பட்ட அத்தகைய எல்லா பணத்தொகைகளும்

i. சுற்றுலா தொடர்பான ஏதாவது சேவைகள் தாபித்தலுக்கான ஆலோசனை சேவைகளை தனிநபர்களுக்கு/நிறுவனங்களுக்கு வழங்குதல்.

ii. சுற்றுலா நோக்குடைய சேரிடங்கள் தாபிப்பதில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஆலோசனைகள் வழங்குதல்.

iii. சுற்றுலா தொடர்புடைய விடயங்கள் (வழிகாட்டி நூல்கள், கையேடுகள், ஒளிப்பதிவு விளக்க நாடாக்கள் இன்னும் பல) வெளியிடுவதன் ஊடாக சேகரிக்கப்படும் நிதி.

iv. ஞாபகமூட்டும் சிற்பங்கள்/ஞாபகார்த்த பொருட்கள் செய்வதில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளருக்கான பெறுமதி சேர்த்தல் பயிற்சி நிகழ்ச்சிகள் வழங்குவதினூடாக சேகரிக்கப்படும் கட்டணங்கள்.

(உ) இந்நியதிச்சட்டத்தின் கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் மூலம் பணியகத்தினது நிதியத்தின் வரவுக்கு வேறுவகையாகத் திரளுகின்ற வேறெல்லாப் பணத்தொகைகளும்.

(3) பணியகமானது அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளைப் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும், புரிவதிலும் அதனால் உறப்பட்ட செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

நிதியாண்டு.

16. பணியகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

17. (1) சபையானது,பணியகத்தின் சொத்துக்களும் பொறுப்புக்களும், வருமானமும் செலவினமும் மற்றும் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குப்புத்தகங்கள் வைத்திருக்கப் படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(2) கணக்காய்வு தொடர்பாக 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாணசபைகள் சட்டத்தின் 23 (1) மற்றும் 23 (2) பிரிவுகள் ஏற்புடையதாகும் என்பதுடன் வடமாகாணத்தின் சுற்றுலாப்பயணத்துறை பணியகத்தின் கணக்குகள், அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்றவொரு கணக்காய்வாளரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

## பாகம் IV
## பொது

18. பணிப்பாளர், சபையின் அங்கீகாரத்துடன் மற்றும் அவ்வாறு செய்தல் அவசியமானதென அவர் கருதுகின்றபோதெல்லாம், அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் பணியை அல்லது கடமையை பணியகத்தின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாமென்பதுடன், அத்தகைய அலுவலர், பணிப்பாளரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, அத்தகைய பணியை அல்லது கடமையை நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

பணிப்பாளர் தமது பணிகளைக் கையளிக்கலாம்.

19. (1) நீண்ட கால அபிவிருத்தித் திட்டத்திற்கு அமைவாக பணிப்பாளர் ஒவ்வோர் ஆண்டிலும் அடுத்துவரும் ஆண்டிற்கான வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தை செத்தெம்பர் 30 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ தயாரிக்கச் செய்தலும் அதை சபைக்கும் அந்த வழியில் அமைச்சருக்கும் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கச் செய்தலும் வேண்டும்.

வருடாந்த அறிக்கை.

(2) பணிப்பாளர், ஒவ்வோராண்டிலும், முன்னைய ஆண்டு தொடர்பான செயற்பாடுகளின் விபரமான அறிக்கையொன்றைத் தயாரிக்கச்செய்தலும் சபைக்கும் அந்த வழியில் அமைச்சருக்கும் சமர்ப்பிக்கச்செய்தலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழான அறிக்கை, ஒவ்வோராண்டும் யூன் முப்பதாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர் அமைச்சருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சர் அத்தகைய அறிக்கை கிடைக்கப்பெற்ற 3 மாதங்களுக்குள் வடமாகாண சபைக்கு முன்வைத்தல் வேண்டும்.

20. அமைச்சர்,அமைச்சர் சபையின் இணக்கப்பாட்டுடன் காலத்துக்குக்காலம், இந்நியதிச்சட்டத்தின்கீழான தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகள் என்பவற்றைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் தொடர்பாகச் சபைக்கு அத்தகைய பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளை வழங்கலாம் என்பதுடன், அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் சபையின் கடமையாதலும் வேண்டும்.

அமைச்சரின் பணிப்புகள்.

21. சபையின் எல்லா உறுப்பினர்களும் மற்றும் பணியகத்தின் அலுவலர்களும், சேவையாளர்களும், முகவர்களும் (19ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் பொருளுக்குட்படவும் அதன் நோக்கத்துக்காகவும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

சபை முதலிய வற்றின் எல்லா உறுப்பினர்களும், பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல்.

22. பணியகமானது, (26ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் பொருளுக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

பணியகமானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல்.

23. (1) (அ) இந்நியதிச்சட்டத்தின் கீழ் பணியகத்தினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக, பணியகத்திற்கெதிராக அல்லது

வழக்குக்கெதிரான பாதுகாப்பு.

(ஆ) இந்நியதிச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின் மீது பணியகத்தின் எவரேனும் உறுப்பினரினால், அலுவலரினால் அல்லது சேவையாளரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக அவருக்கெதிராக, வழக்கு அல்லது குற்றவழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(2) இந்நியதிச் சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்பேரில், உட்பிரிவு 1 இன் கீழ் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய எவரேனுமாளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல்தொடர்பில் அவருக்கெதிராகத் தொடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது குற்றவழக்கில் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், பணியகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

24. இந்நியதிச் சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றுக்கு பயன் கொடுக்கும் நோக்கத்திற்காக அமைச்சர் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

i. உட்பிரிவு 1 இன் கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

ii. உட்பிரிவு 1 இன் கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதக் காலப்பகுதியினுள் அங்கீகாரத்திற்காக வடமாகாண சபையின் முன்கொணரப்படல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

iii. ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்பட வேண்டிய திகதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாத் துறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல்.

25. இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளிற்கும் 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல்.

பொருள் கோடல்

26. “அமைச்சர்” என்பது வட மாகாண சுற்றுலாத்துறை விடயத்திற்கு பொறுப்பாகவுள்ள அமைச்சரைக் குறிக்கும்.

ஒவ்வாமையின் விடயத்தில் தமிழ் உரை மேலோங்கி நிற்றல்.

27. இந்நியதிச்சட்டத்தின் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

2 - 2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.